මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: LAE/2025/86** **2025.05.03**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025 மே 06

## பல்கலைக்கழகங்களின் பணியாட்குழுவினருக்கும் மாணவ மாணவிகளுக்கும் வாக்களிப்பதை இயலச்செய்யும் விதத்தில் லீவு வழங்குதல்

அரச மற்றும் தனியார் துறையில் பணிபுரிவோருக்கு, வாக்கெடுப்புகளின் போது சம்பளக் குறைப்பற்றதாக அல்லது சொந்த லீவு குறைப்பற்றதாக வாக்களிப்பதை இயலச்செய்யும் விதத்தில் லீவு வழங்குதல் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2025.04.25 ஆம் திகதிய, LAE/2025/71 மற்றும் LAE/2025/72 ஆம் இலக்க ஊடக அறிவித்தல் மீது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அவ்வாறே, இந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் வாக்கெடுப்பின்போது அரச பல்கலைக்கழகங்களின் பணியாட் குழுவினருக்கும் அவற்றில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கும் வாக்களிப்பதை இயலச் செய்யும் விதத்தில் லீவு வழங்கச் செயலாற்றுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

03. அதற்கிணங்க, அரச பல்கலைக்கழகங்களின் கீழ் வராத தனியார் பல்கலைக்கழகங்களிடமும் உயல்கல்வி நிறுவகங்களிடமும், தமது பணியாட்குழுவினருக்கும் அவற்றில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கும் இத்தேர்தலின் போது வாக்களிப்பதை இயலச்செய்யும் விதத்தில் லீவு வழங்கச் செயலாற்றுமாறு இத்தால் வேண்டப்படுகின்றது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்